நூலக நிறுவனத்தின் காலாண்டு வெளியீடு

NOOLAHAM FOUNDATION

# புதிய நூலகம்

இதழ் 17 | ஏப்ரல் 2013

www.noolahamfoundation.org

2013 ஆம் ஆண்டிற்கான முதலாவது புதிய நூலகம் செய்திமடல் இதுவாகும். நூலக நிறுவனத்தின் செய்திமடல் வெளியீட்டில் இவ்வாண்டில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. காலாண்டிற்கொரு செய்திமடல்களை வெளியிடுவதெனவும் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளில் செய்திமடல்களை வெளியிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் ஆங்கிலச் செய்திமடலான Noolaham News இனது முதல் இதழ் 2013 ஏப்ரல் மாதத்துக்குரியதாக வெளியாகியுள்ளது.

உங்கள் கருத்துக்களையும் யோசனைகளையும் noolahamfoundation@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியூடாக எமக்குத் தெரியப்படுத்தலாம்.

## தமிழ் ஆவண மாநாடு 2013

ஒன்பதாவது ஆண்டினுள் நுழைந்துள்ள நூலகம் 2013 இல் பல புதிய நிகழ்ச்சித் திட்டங்களையும் செயற்றிட்டங்களையும் முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது.

“ஈழத்துத் தமிழ்ச் சூழலில் ஆவணப்படுத்தலும் பேணிப் பாதுகாத்தலும்” எனும் தொனிப்பொருளில் நடைபெறவுள்ள இம் மாநாடு எதிர்வரும் 2013 ஏப்ரல் மாதம் 27, 28ஆம் திகதிகளில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

பின்வரும் தலைப்புக்களில் ஆய்வுக்கட்டுரைகள் கோரப்பட்டன.

1. வரலாறு, தொல்லியல் ஆவணங்களும் மரபறிவுப் பதிவுகளும்
2. ஒலி, ஒளி, புகைப்பட ஆவணங்கள்
3. தனிமனித ஆளுமைகள், நிறுவனங்கள்
4. சமூகத்தை ஆவணப்படுத்தல்
5. மொழி இலக்கியப் பதிவுகள்

மிகக்குறுகிய கால அவகாசத்துடன் இம்மாநாட்டுக்கான கட்டுரைகள் கோரப்பட்ட போதும் 120க்கும் அதிகமான கட்டுரைச் சுருக்கங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் முதல் சமூகச் செயற்பாட்டாளர்கள் வரை பல்வகையானோரின் கட்டுரைச் சுருக்கங்கள் கிடைத்துள்ளன.

பெருமளவு தரமான கட்டுரைகள் கிடைத்துள்ளமையால் மாநாட்டினை அதிக அமர்வுகளுடன் நடாத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அவ்வகையில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் இரு மண்டபங்களில் ஒரே நேரத்தில் இரு அமர்வுகள் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

6. அறிவுப்பகிர்வும் கல்வியும்
7. ஆவணப்படுத்தலில் தொழினுட்பப் பயன்பாடுகள்
8. எண்ணிம நூலகங்கள், இணையத் தளங்கள், தரவுத் தளங்கள்
9. நூல் விபரப்பட்டியலும் நூலகவியலும்
10. கலை பண்பாட்டு நினைவுகளும்

## நூலகம் ஆய்விதழ் வெளியீடு

நூலக நிறுவனத்தின் இன்னுமொரு நிகழ்ச்சித்திட்டமாக நூலகம் ஆய்விதழ் 2013 முதல் வெளியாகவுள்ளது. ஆவணப்படுத்தல்சார் தொழினுட்பங்கள், தகவல் அறிவியல், அறிவுப்பகிர்வு, நூலகவியல் சார்ந்த விடயப்பரப்புகளையும் இலங்கையின் தமிழ்பேசும் சமூகங்களிடையே ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய விடயப்பரப்புக்களையும் உள்ளடக்கியதாக இந்த ஆய்விதழ் வெளியாகவுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பிரிவுத் தலைவரான பேராசிரியர் வ.மகேஸ்வரன் முதன்மை ஆசிரியராகவும் தென்கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் க.ரகுபரன் இணை ஆசிரியராகவும் 2013 இல் செயற்படவுள்ளனர். நிர்வாக ஆசிரியராக வி.விமலாதித்தனும் தயாரிப்பு ஆசிரியராக சி.மயூரனும் செயற்படுவர்.

ஆய்விதழின் முதல் இதழை தமிழ் ஆவண மாநாட்டின் போது வெளியிடுவதாக ஆரம்பத்தில் திட்டமிட்டிருந்த போதும் மாநாட்டு அமர்வுகள் அதிகரித்துள்ளமை, ஆய்விதழ் வேலைகளைத் துரிதப்படுத்த முடியாத நிலையினை ஏற்படுத்தியுள்ளது. அவ்வகையில் முதலிதழின் வெளியீடு தாமதமாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதிப் பங்களிப்புக்கள் 2012

நூலக நிறுவனச் செயற்பாடுகளுக்கான நிதியினைப் பல்வேறு தன்னார்வலர்களும் நிறுவனங்களுமே வழங்கி வருகின்றனர். அவ்வகையில் நீங்களும் நூலக நிறுவனத்துக்கு நிதி வழங்குவதனூடாக நூலகச் செயற்பாடுகளில் பங்கெடுக்க முடியும்.

2012 ஆம் ஆண்டில் 26 நிதிப் பங்களிப்பாளர்கள் 2.3 மில்லியன் இலங்கை ரூபாய்களை நூலக நிறுவனத்துக்கு வழங்கியுள்ளனர். அவர்களது பங்களிப்பு விபரம் வருமாறு:

| | |
|---|---|
| ஐக்கிய அமெரிக்க தூதுவரகம் | 568,147.50 |
| மீட்பு மற்றும் நிவாரண வலையமைப்பு (இங்கிலாந்து) | 420,945.00 |
| பத்மநாப ஐயர் இரத்தின ஐயர் | 239,770.00 |
| நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை | 213,713.50 |
| பவாகரன் வன்னியசிங்கம் | 208,373.00 |
| நற்கீரன் காந்தன் | 109,095.00 |
| கோபிநாத் தில்லைநாதன் | 72,100.00 |
| மனமோகன், வி. | 65,000.00 |
| தமிழ் இலக்கியத் தோட்டம் | 56,875.00 |
| கோபி, டிசான், நண்பர்கள் | 55,900.00 |
| நூலகம் ஐக்கிய இராச்சியம் | 46,912.50 |
| ஜெயச்சந்திரன் வைத்திலிங்கம் | 32,500.00 |
| சாகர் முத்துக்குமாரு | 2,500.00 |
| குமரன், அ. | 32,500.00 |
| சுதர்சன் சிறீனிவாசன் | 30,010.00 |
| பிறேம்குமார், அ. | 26,000.00 |
| யோகா நாதன் அறக்கட்டளை | 25,000.00 |
| சிவகுமாரன், கே. | 14,500.00 |
| பிராங்லின் மார்சல், கி. | 13,000.00 |
| அகிலன் பூபாலசிங்கம் | 13,000.00 |
| அனோஜன் குணரத்தினம் | 13,000.00 |
| அருள்பிரகாசம், எஸ். | 13,000.00 |
| அரவிந் சிவகுமாரன் | 11,750.00 |
| நந்தா கணேசன் | 11,315.00 |
| பாலசுதன் கோபாலசிங்கம் | 6,500.00 |
| சம்பத் வங்கி, வெள்ளவத்தை | 5,000.00 |
| மொத்தம் | 2,336,406.50 |

நிதிப்பயன்பாடு தொடர்பான விரிவான விபரங்கள் 2012 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் வெளியிடப்படும்.

# தலைமைச் செயற்பாட்டு அலுவலர்

2013 தை மாதத்தில் விமலநாதன் விமலாதித்தன் நூலக நிறுவனத்தின் புதிய தலைமைச் செயற்பாட்டு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை அப்பொறுப்பிலிருந்து பணியாற்றிய சேரன் சிவானந்தமூர்த்தி ஓர் இயக்குனராகத் தொடர்ந்தும் பணியாற்றவுள்ளார்.

விமலாதித்தன் **Board of Architectural Education, Sri Lanka Institute of Architects** இல் ஓர் உதவி முகாமையாளராகக் கடமையாற்றுகிறார். புகைப்படக்கலை, கவிதை போன்ற கலைகளில் ஆர்வமுள்ளவர். இவரது கவிதைத் தொகுப்பான 'பொய்யும் பழங்கதையும் வெறுங்கனவும்' 2010இல் இந்தியாவின் தகிதா பதிப்பகத்தினூடாக வெளியாகியுள்ளது. தென்னாசியத் தொல்லியல், தமிழ், பக்தி இலக்கியம் போன்ற துறைகளிலும் விமலாதித்தன் ஆர்வமுள்ளவர் ஆவார்.

# நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை நிதியுதவி

நீலன் திருச்செல்வம் அறக்கட்டளையினர் நூலக நிறுவனத்தின் எண்ணிம ஆவணப்படுத்தற் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் ஆறு மாத கால ஆவணப்படுத்தற் செயற்றிட்ட மொன்றுக்கான நிதியுதவியினை வழங்கியுள்ளனர்.

இச்செயற்றிட்டமானது பல்வேறு ஆவணங் களின் 30,000 பக்கங்களை ஆவணப்படுத்தி இணையத்தினூடாக அனைவருக்கும் கிடைக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதனுடனிணைந்ததாக குறித்த ஆவணங்களின் ஆசிரியர்களது அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாடும் நடைபெற்றுவருகிறது.

2012 ஒக்ரோபரில் ஆரம்பமான இச் செயற்றிட்டத்தின் முதலிரு மாதங்களில் 29 வெளியீடுகளின் 5927 பக்கங்கள் எண்ணிம வடிவத்துக்கு மாற்றப்பட் டுள்ளன. மேலும் 3758 பக்கங்களைக் கொண்ட 45 வெளியீடுகள் ஆவணப்படுத்தலுக்காகச் சேகரிக்கப்பட்டுள்ளன. 15 பதிப்புரிமையாளர்களின் அனுமதிகளும் கிடைத்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் எவர் நிகழ்ச்சித்திட்டம்

சமூகங்கள் தொடர்பான ஆய்வுகளுக்கு அச்சமூகங்களின் ஆளுமைகள் தொடர்பான தகவல்கள் இன்றியமையாதவை ஆகும். அவ்வகையில் யார் எவர் தொகுப்புக்கள் ஆவணப்படுத்தலில் முக்கியமாகின்றன. இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களது ஆளுமைகள் தொடர்பான தகவல்கள் நாளாந்தம் நூல்களாகவும் கட்டுரைகளாகவும் குறிப்புக்களாகவும் வெளியாகிவருகின்றன.

நூலக நிறுவனத்தின் எண்ணிம நூலக வலைத்தளத்திலுள்ள 12000 க்கும் அதிகமான ஆவணங்களில் பல்லாயிரக்கணக்கான ஆளுமைகள் தொடர்பான தகவல்கள் உள்ளன. ஆயினும் அவற்றினை இலகுவாகத் தேடிப் பயன்படுத்தும் வசதிகள் போதியதாக இல்லை.

இக்குறையினை நிவர்த்திசெய்யும் வகையில் யார் எவர் எனும் நிகழ்ச்சித்திட்டம் விரைவில் தொடங்கப்படவுள்ளது. எண்ணிம நூலக வலைத்தளத்தினையும் ஏனைய இணைய வளங்களையும் சுட்டியாக்கம் செய்வதனூடாக ஒரு விரிவான தரவுத்தளம் உருவாக்கப்படவுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான மேலதிக விபரங்கள் விரைவில் நூலக நிறுவன வலைத்தளத்தில் வெளியிடப்படும்.

# எண்ணிம நூலக வலைத்தளம் 2012

நூலக நிறுவனத்தின் எண்ணிம நூலக வலைத்தளமான www.noolaham.org ஆனது ஆய்வாளர்கள் முதல் மாணவர்கள் வரை பல்வேறு தரப்பினராலும் பரவலாகப் பயன்படுத்தப்படும் ஓர் உசாத்துணை இணையத் தளமாக மாறியுள்ளது.

2012இல் 2,050 ஆவணங்கள் எண்ணிம வடிவங்களில் பதிவுசெய்யப்பட்டு அவை தொடர்பான தகவல்கள் நூலக வலைத்தளத்தில் பதிவாகியுள்ளன. அவ்வகையில் 2012 இறுதியில் நூலக வலைத்தளத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள ஆவணங்களின் எண்ணிக்கை 12108 ஆகும். அவற்றின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| நூல்கள் | 3,806 |
| சஞ்சிகைகள் | 4,930 |
| செய்தித்தாள்கள் | 1,986 |
| ஏனையவை | 1,386 |
| மொத்தம் | 12,108 |

இந்த ஆவணங்கள் 108 ஆண்டுகளில் வெளியானவை ஆகும். 1,586 பதிப்பாளர்களூடாக 2,147 ஆசிரியர்கள் வெளியிட்ட நூல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. 400க்கும் அதிகமான வெவ்வேறான சஞ்சிகைகளும் பதிவாகியுள்ளன.

நூலக வலைத்தளத்தில் முஸ்லிம் ஆவணகம், தலித் ஆவணகம், மலையக ஆவணகம், பெண்கள் ஆவணகம் ஆகிய நான்கு சிறப்புச் சேகரங்களும் ஒன்பது வலைவாசல்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

| மாதம் | பார்வையிட்டோர் | பார்வையிட்ட தடவைகள் | பக்கங்கள் |
|---|---|---|---|
| சனவரி | 11,116 | 19,948 | 214,710 |
| பெப்ரவரி | 10,287 | 19,258 | 195,269 |
| மார்ச் | 10,619 | 19,559 | 223,437 |
| ஏப்ரல் | 10,618 | 18,782 | 240,913 |
| மே | 12,143 | 20,686 | 229,385 |
| யூன் | 12,913 | 20,870 | 205,025 |
| யூலை | 13,594 | 21,743 | 278,039 |
| ஓகஸ்ற் | 14,319 | 23,560 | 399,523 |
| செப்ரெம்பர் | 12,918 | 20,417 | 399,095 |
| ஒக்ரோபர் | 14,168 | 23,258 | 536,773 |
| நவம்பர் | 13,288 | 21,996 | 436,909 |
| டிசம்பர் | 14,194 | 23,378 | 394,657 |
| மொத்தம் | 150,177 | 253,455 | 3,753,735 |

**நூலகம் பற்றி**

**பின்னூட்டல்கள் சில..............**

நூலகம் மகத்தான சேவையைச் செய்து வருவதை அவதானிக்க முடிகிறது. சிறிது தாமதமாக ஆரம்பித்து பதிவுகள் நடைபெற்றாலும், இப்பொழுது நான் வழங்கிய அத்தனை புத்தகங்களும் நூலகத்தில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளதை அவதானித்தேன். கூடிய விரைவில் இந்நூல்களில் உள்ளடக்கங்களும் முழுமையாக சேர்க்கப்படும் என்று எண்ணுகிறேன். எனது புதிய புத்தகமான "திறனாய்வு" என்ற நூலை இன்று சமர்ப்பித்தேன். இவ் நூல் ஆவணப்படுத்தப்படும் என்று நம்புகிறேன். நூலக அலுவலகத்தில் பணிபுரியும் நிஷாந்தினி மிகவும் பண்பாகவும், துரிதமாகவும் எமது பதிவுகளை சிறிது நேரத்தில் செய்து தந்தார். அவருக்கு எனது வாழ்த்துக்கள்.

[கே.எஸ். சிவகுமாரன் –28/03/2013]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி Lebera நூலகத்திற்கு நூலக நிறுவனத்தின் ஆவணங்கள்

நாடு முழுவதும் நீண்ட காலமமாக இலங்கை OMI மிசன் தீவிரமாக சமூகநல நடவடிக்கைகளில் பெரியளவில் ஈடுபட்டு வருகிறது.

சமூகத்தில் அதன் சேவையின் ஒரு பகுதியாக Lebera நூலகம் கிளிநொச்சியில் புதிதாக திறந்து வைக்கப்பட்டது. Lebera நூலக திறப்பு விழா 16.02.2012 அன்று கிளிநொச்சியில் உள்ள 'அன்னை இல்லத்தில்' நடைபெற்றது. இதில் நூலக நிறுவனத்தின் நூலக அறிவியல் ஆலோசனை குழுவின் உறுப்பினர் திருமதி.இமெல்டா கருணாகரன் (நூலகர், யாழ்ப்பாண பொது நூலகம்), நூலக நிறுவனத்தின் இயக்குனர் சேரன் சிவானந்தமூர்த்தி மற்றும் தன்னார்வ செயற்பாட்டாளர்கள் ஜெ.லடிஸ்லஸ், எஸ். உமாதரன், சிந்துஷன் ஆகியோர் பங்கேற்றனர். இந்த நிகழ்வில் நூலக நிறுவனத்தில் எண்ணிமப்படுத்தப்பட்ட 1981ம் ஆண்டுக்கு முன்னதான நூல்களின் தொகுப்பு சமர்ப்பிக்கப் பட்டது. இலாப நோக்கற்ற நிறுவனங்கள் இதே போன்ற கூட்டு செயற்பாடுகளின் மூலம் அதன் சேவைகளை விரிவாக்க முடியும் என்பதற்கு ஏற்ப நூலக நிறுவனமும் செயல்பட்டு வருகிறது.

## கொழும்பில் 'பள்ளிக்கூடம்' திட்டம் கலந்துரையாடல்



நூலகநிறுவனத்தால் பள்ளிக்கூடம் திட்டத்திற்கான ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வெளிநாட்டு வளவாளர்களுடன் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது.2013 மார்ச் 6 ஆம் திகதியன்று Cinnamon Lakeside ஹோட்டலில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் லண்ட் பல்கலைக்கழக கல்வியல் பிரிவின் சமூகவியல் துறை விரிவுரையாளர் Agneta W Flinck, செயற்திட்ட ஒருங்கிணைப்பாளர் Andreas Bryngelson ஆகியோருடன் பேராசிரியர் எஸ்.சந்திரசேகரன், சுரேஷ்குமார் கந்தசாமி, சேரன் சிவானந்தமூர்த்தி, சிந்தூரி யோகலிங்கம் மற்றும் வராகினி சண்முகதாஸ் ஆகியோர் பங்கேற்றனர்.

## நூலக நிறுவனம் அறிமுக நிகழ்வு - மட்டக்களப்பு

நூலக நிறுவனம் மற்றும் அதன் திட்டங்கள், பற்றிய ஒரு அறிமுக நிகழ்வு 30 மார்ச் 2013 அன்று மட்டக்களப்பு கூட்டுறவு மைய மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வின் முதன்மை நோக்கம் நூலக நிறுவனத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது. நிகழ்வு இரண்டு பிரிவுகளாக இடம்பெற்றது. காலை 9 மணி முதல் 12 மணி வரை பொது மக்களுக்காகவும் மாலை 2 மணி முதல் 5 மணிவரை குறிப்பாக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான நிகழ்வாகவும் அமைந்தது. நூலக நிறுவனம் சார்பில் நிறுவனத்தின் இயக்குனர் சேரன் சிவானந்தமூர்த்தி, சுரேஷ்குமார் கந்தசாமி அனுஹேமன் அன்னலிங்கம், உமாதரன் சிவதாஸ், மயூரன் சிவநாதன், ஹரிஷாந்த் திரவியநாதன் மற்றும் சிவராஜன் பாலகுமாரன் ஆகியோர் கலந்துகொண்டனர். அப்பகுதியில் இருந்து கிடைக்கும் வளங்களை பெற்று நூலக நிறுவனமானது செயற்படுத்துவதும், தற்போது நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மெய்நிகர் வகுப்பறை திட்டத்தைப் பற்றி விளக்குவதும் முக்கிய நோக்காக இருந்தது.

நிறுவனத்தின் இயக்குனர் சேரன் சிவானந்தமூர்த்தி நிறுவனத்தின் பின்னணி பற்றி சுருக்கமான அறிமுகத்தையும் நூலக நிறுவனத்தின் கடந்த கால மற்றும் தற்போதைய நடவடிக்கைகள் பற்றியும் விளக்கினார். அத்துடன் தமிழ் ஆவணப்படுத்தல் மாநாடு, நூலகம் ஆய்விதழ் பற்றி மயூரன் சிவநாதனும் நிறுவன காப்பகம் பற்றி சி.உமாதரனும் கூறினார். நிகழ்வின் அடுத்த பகுதியாக சுரேஷ்குமார் கந்தசாமி மெய்நிகர் வகுப்பறைத் திட்டத்தை அறிமுகம் செய்தார் மற்றும் ஹரிஷாந்த் திரவியநாதன் www.noolaham.org வலைத்தளத்தில் ஒரு கண்ணோட்டதை வழங்கினர் இந் நிகழ்வானது மட்டக்களப்பில் நூலக நிறுவனம் தமது கிளைகளை பரப்ப உறுதுணையாகவிருக்கும். இந்த நிகழ்வை வெற்றிகரமாக செய்ய சர்மிளா ரகுநாதன் மற்றும் சீலன் சிவகுரு ஆகியோர் உதவியமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேத்தியர் தமிழாவணம் வெளியீடு.



றோயல் கல்லூரியில் கடந்த 48 வருடங்களாக வெளிவந்த தமிழ் நூல்கள் றோயல் கல்லூரி தமிழ் விவாதிகள் ஒன்றியத்தால் சேகரிக்கப்பட்டு நூலக நிறுவனத்துடன் இணைந்து எண்ணிமப்படுத்தப்பட்டு, எண்ணிம வடிவம் வெளியிடப்பட்டது. வேத்தியர் தமிழாவணம் 2013 என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட இந்த இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு கடந்த 2013 மார்ச் 31ஆம் திகதி றோயல் கல்லூரி திறன் மையத்தில் நடாத்தப்பட்டது. இதை நூலக நிறுவனமும் றோயல் கல்லூரியும் இணைந்து நடாத்தின.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மதிப்பிற்குரிய டி.எம். சுவாமிநாதனும்,சிறப்பு விருந்தினராக வழக்கறிஞர் எம்.இராஜ இராஜேஸ்வரன் தங்கராஜாவும் றோயல் கல்லூரி அதிபர் எச்.ஏ.உபாலி குணசேகர, பதில் அதிபர் எம்.கணபதிப்பிள்ளை ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். மேலும், றோயல் கல்லூரியின் தற்போதைய விவாத அணியின் பொறுப்பாசிரியர் ஜி.ஸ்ரீராகவராஜன், நூலக நிறுவனத்தின் இயக்குநர் சி.சேரன் மற்றும் கடந்த காலத்தில் விவாத அணியின் தலைவர்களாக இருந்தவர்கள், பழைய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# 'பனையோலை' ஆவண கருத்தரங்கு கொழும்பு.

'பனையோலை' என்ற தலைப்பில் ஒரு ஆவண கருத்தரங்கு 03.03.2013 அன்று வெள்ளவத்தையில் உள்ள கொழும்பு தமிழ்ச்சங்கம் வினோதன் மண்டபத்தில் நடத்தப்பட்டது. நிகழ்வில் விமலாதித்தன் விமலநாதன் வரவேற்புரையை நிகழ்த்தினர். அவரை தொடர்ந்து தெ.மதுசூதனன் தனது உரையை நிகழ்த்தினர். அதன் பிறகு 'ஆவணம் மற்றும் அறிவு பகிர்வு' என்ற தலைப்பில் ஒரு சிறிய உரையை பேராசிரியர் சபா ஜெயராஜா வழங்கினார். அடுத்த 'இலங்கை தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஆவணங்களும் அடுத்த கட்டநடவடிக்கைகளும்' என்ற தலைப்பில் கே.ரகுபரன் உரை ஒன்றை நிகழ்த்தினர் அதனை தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடலில் பலதரப்பட்ட சமூகத்தினர், ஊடகவியலாளர்கள், கல்வியாளர்கள் என பலர் தமது கருத்துகளை பகிர்ந்தனர். கருத்தரங்கின் இறுதியில் நூலக நிறுவனத்தின் இயக்குனர் சேரன் சிவானந்தமூர்த்தி நன்றியுரை வழங்கினார்.

# நுட்பம் மாநாடு - 2013



'நுட்பம் தொழில்நுட்ப மாநாடு' மார்ச் 2013 9 ஆம் திகதி யாழ்ப்பாண பொது நூலகம் அரங்கத்தில் நடைபெற்றது. அது 'நுட்பம்' என்ற தமிழ் தகவல் தொழில்நுட்ப அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டது. தகவல் தொழில்நுட்ப பகுதியில் பல்வேறு தலைப்புகளில் ஆராயப்பட்டது. அவற்றில் 14 ஆராய்ச்சி கட்டுரைகள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டது. நூலக நிறுவன இயக்குனர் திரு.சேரன் சிவானந்தமூர்த்தி 'இலங்கையில் தமிழ் எண்ணிமப்படுத்தும் முயற்சிகள்' என்ற தலைப்பில் ஒரு ஆய்வு அறிக்கையை சமர்ப்பித்தார். யாழ்ப்பாண பல்கலைக்கழக கணினி அறிவியல்துறை விரிவுரையாளர் சர்வேஸ்வரன் கங்காதரையர் அவர்களும் ஆய்வு அறிக்கை சமர்ப்பித்திருந்தார். இவ்விரு ஆராய்ச்சி கட்டுரைகளும் பார்வையாளர்களிடம் இருந்து பெரிதும் வரவேற்பை பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'பள்ளிக்கூடம்' செயற்திட்டம் கலந்துரையாடல் யாழ்ப்பாணம்.

நூலக நிறுவனமானது தனது செயற்திட்டங்களையும் நடாத்தி வரும் செயற்பாடுகள் பற்றிய அறிவையும் பொது மக்களிடையே வெளிக்கொண்டுவர வேண்டும் என்ற நோக்கத்தில் பல நிகழ்வுகளை நடாத்தி வருகின்றது. இந்த நோக்கத்திற்கமைய 12.01.2013 அன்று யாழ்ப்பாணம், சுண்டுக்குளியில் அமைந்துள்ள குழந்தைகள் மேம்பாட்டு மைய (Center For Child Development) (CFCD) அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அக்கலந்துரையாடலில் குழந்தைகள் மேம்பாட்டு மைய ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் நூலக நிறுவனத்தின் ‘மெய்நிகர் பள்ளித் திட்டம்' பற்றிய முழுமையான தகவல்கள் வழங்கப்பட்டது. இந்த திட்டத்தின் தலையாய நோக்கம் மாணவர்களுக்கு அனைத்து வகையான கல்வி வளங்களை கொண்ட சூழலை உருவாக்கல் என்பதாகும் .

இக்கலந்துரையாடலில் நூலக நிறுவனத்தின் இயக்குநர் சேரன் சிவானந்தமூர்த்தி மற்றும் நூலக நிறுவனத்தின் யாழ்ப்பாண ஒருங்கிணைப்பாளர் கௌதமன் குஞ்சிதபாதம் ஆகியோர் கலந்துகொண்டனர். எதிர்காலத்தில் எமது திட்டங்களுக்கு CFCD போன்ற இலாப நோக்கற்ற நிறுவனங்களின் ஆதரவை பெறுதலும் இந்த கலந்துரையாடலின் நோக்கங்களில் ஒன்றாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

புதிய நூலகம் இதழின் உள்ளடக்கம் அனைத்தும் நூலக நிறுவனத்தின் நிலைப்பாட்டைப் பிரதிபலிப்பதாக இருக்குமென்றில்லை. வெளியாகும் கட்டுரைகளின் கருத்துக்கள் கட்டுரையாளர்களுடையவை. புதிய நூலகம் இதழுக்கென எழுதப்படும் உள்ளடக்கம் Attribution-ShareAlike 3.0 Unported (CC BY-SA 3.0) உரிமத்துடன் வெளியாகின்றது. மறுபதிப்புக்கள் அவற்றின் மூலப்பிரதியின் உரிமத்துடன் வெளியாகின்றன.

---

**To**

........................................................................

........................................................................

........................................................................

........................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org